JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - PW- 6   Witness for Prosecution

| CC No. | 69/2021 | Crime No. | | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | PW.6.செந்தில்குமார் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the $10^{th}$ day of September 2025 | | | |

**3,6 & 7 எதிரிகள் ஆஜர் இல்லை.**

முதல் விசாரணை

நான் குச்சலூரில் குடியிருந்து கொண்டு மைக் செட் கட்டும் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. ஒரு 7,8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 5 மணியளவில் நானும் சத்தியசீலன் என்பவரும் மைக் செட் கட்டுவதற்காக அத்தாணி காலனி செல்வதற்காக செம்புலிச்சாம்பாளையம் வழியாக சென்று கொண்டிருந்தபோது, அங்கு கூட்டமாக இருந்தது. போலீசார் இருந்தார்கள் நாங்களும் அருகில் சென்று பார்த்த போது பவானி இன்ஸ்பெக்டர் எங்களிடம் கையெழுத்து கேட்டார். நான் கையெழுத்து செய்தேன். எதற்காக கையெழுத்து செய்தேன் என்று எனக்கு தெரியவில்லை. அப்போது ஒரு தாளிலும் பின்னர் காவல் நிலையத்திற்கு வரவழைத்து ஒரு தாளிலும் கையெழுத்து பெற்றார்கள். நான் மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தற்போது சரியாக ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் கார் மற்றும் பணத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் காரை மட்டும் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் (பார்வை மகஜர் மற்றும் இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதக் கோரி கூறியதன் பேரில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 11.12.2015 ஆம் தேதி அன்று மாலை சுமார் 5 மணியளவில் நானும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.10 06:31:38 +0530

சத்தியசீலன் என்பவரும் மைக் செட் கட்டுவதற்காக அட்டாணி காலனிக்கு செல்வதற்காக தேவன் தோட்டம் வழியாக சென்று கொண்டிருந்தபோது, தேவன் தோட்டத்திற்கு அருகில் கூட்டமாக இருந்ததாகவும், நானும் சத்தியசீலனும் அருகில் சென்று பார்த்ததாகவும், அப்போது பவானி இன்ஸ்பெக்டர் எங்கள் இருவரிடமும் அங்கிருந்த ஏழு பேரை அடையாளம் காட்டி இவர்கள் கோயம்புத்தூர் மற்றும் தாளவாடி போன்ற ஊர்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் விலை உயர்ந்த உலோகப் பொருட்களை இருடியம் இருப்பதாக சொல்லி அங்கிருந்த ஜெயக்குமார் மற்றும் அவரது நண்பர்கள் துளசிதாஸ் ஆகியோரிடம் 45 லட்சம் பணத்தை வங்கி மூலம் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டு தலைமறைவாகி விட்டதாகவும், அவர்கள் தேவன் தோட்டத்தில் இருப்பதாக கேள்விப்பட்டு அங்கு வந்து ஜெயக்குமார் மற்றும் அவரது உறவினர்களுடன் வந்து பணத்தை கேட்ட போது தகராறு செய்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அது தொடர்பாக அந்த இடத்தில் பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் வரைந்ததாகவும், அதற்கு பார்வை மகஜரில் என்னிடமும் சத்தியசீலன் என்பவரிடமும் போலீசார் கையொப்பம் கேட்டதாகவும், நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பின்னர் எங்கள் முன்னிலையில் அன்றைய தினம் இரவு சுமார் 7.15 மணி அளவில் எதிரிகள் வந்த ஸ்கிரிப்ட் காரையும் அதிலிருந்து பணம் ரூபாய் 23,000/– கைப்பற்றுதல் மகஜர் மூலம் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், பின்னர் 7.45 மணியளவில் மற்றொரு கார் மற்றொரு கைப்பற்றுதல் மகஜர் மூலம் போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், அந்த இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்பட்ட மூன்று தாள்களிலும் போலீசார் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

**3,6 & 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3, 6 & 7 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச 317ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.09.10 06:31:58 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1,
Bhavani.